## ஸ்டாலின் என்றால் இரும்பு மனிதர்! திராவிட இயக்கம் என்றால் 'எஃகுக் கோட்டை!'

## செயின்ட் ஜார்ஜ் கோட்டை வேண்டுமானால் மற்றவர்களுக்குச் சென்றிருக்கலாம்! எஃகுக் கோட்டையான

# திராவிட கொள்கைக் கோட்டையை யாராலும் அசைக்க முடியாது!

## சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னின்று நடத்திய

## 'நெருப்பாற்றில் நீந்திய காலம்' கருத்தரங்கில் – திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி எழுச்சியுரை!

**சென்னை, செப். 26 -**

**சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், "நெருப்பாற்றில் நீந்திய காலம்" எனும் தலைப்பில் மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் கருத்தரங்கில் கலந்துகொண்டு எழுச்சியுரையாற்றிய திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள், "செயின்ட் ஜார்ஜ் கோட்டை வேண்டுமானால், வேறு யாரிடமாவது போய்ச் சேர்ந்திருக்கலாம்; ஆனால் திராவிட இயக்க கொள்கைக் கோட்டையை யாராலும் அசைத்துக் கூடப் பார்க்க முடியாது!" என உறுதிபடக் குறிப்பிட்டார்.**

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், சென்னை - எழும்பூர் தெற்குப் பகுதியில் உள்ள பெரியார் திடலில், 18.9.2026 வெள்ளிக்கிழமை மாலை மாபெரும் கருத்தரங்கம், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில், எழும்பூர் தெற்குப் பகுதிச் செயலாளர் வி.சுதாகர் தலைமையில் நடைபெற்றது.

"நெருப்பாற்றில் நீந்திய காலம்" எனும் தலைப்பில் மிசாக் காலக் கொடுமைகளை விளக்கும் இம்மாபெரும் கருத்தரங்கில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி, கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி என். சிவா எம்.பி., தமிழ் தேசிய விடுதலை இயக்கப் பொதுச்செயலாளர் தோழர் தியாகு ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

தந்தை பெரியார் திடலிலே நடைபெறும் இந்தச் சிறப்பான நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறவர் சென்னை கிழக்கு மாவட்ட ஆற்றல்மிகு செயலாளர் சேகர்பாபு அவர்கள். அவர் எதைச் செய்தாலும் விரைவாகவும் வேகமாகவும் செய்வார். அவருக்கு உறுதுணையாக இந்த மேடையிலே இருப்பவர்கள் பலர் உண்டு.

### சிறை பறவை!

இங்கு சிலவற்றை எழுச்சி பெறச் சொன்னவர் அருமைத் தோழர் தியாகு அவர்கள். அவர் ஒரு 'சிறைப் பறவை'. பறவைகூட கொஞ்சம் கூட்டுக்கு வெளியே போகும். ஆனால், இந்தப் பறவை கூட்டுக்குள் இருந்தவர் அல்ல, கூண்டுக்குள் இருந்தவர். கூண்டு வேறு, கூடு வேறு. தானே கட்டிக் கொண்டு சுதந்திரமாக வாழ்வதற்குப் பெயர் கூடு; ஆனால் கூண்டு என்பது அடைக்கப்படுவது. ஆனால் அதெல்லாம் சாதாரணம் என்று, 15 ஆண்டுகள் சிறையில் இருந்தவர் தியாகு அவர்கள்! அவர் பெயரிலேயே 'தியாகம்' இருக்கிறது; அப்படிப்பட்டவர் அருமையான உரையாற்றியிருக்கிறார்.

அதுபோல, 'மிசா'வில், ஒரு எளிய மாணவனாக, இளைஞனாகத்தான் நான்கலந்துகொண்டேன். ஆனால், இவ்வளவு அடக்குமுறைக்குப் பிறகும் இந்த இயக்கம் அழிந்துவிடவில்லை; அகில இந்திய அளவிலே ஒரு பெயர் அறியப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதுதான் திருச்சி சிவா என்று சொல்லும்'மிசா' என்பதாகும். அதுவும் இரண்டெழுத்துதான், இதுவும் இரண்டெழுத்துதான். 'சிவா' என்பதும் அவ்வளவுதான், 'மிசா' என்பதும் அவ்வளவுதான். ஆனால் அதற்குப் பிறகு அவர் வளர்ந்திருக்கிறார்; மிசாவுக்குப் பிறகு தி.மு.க. வளர்ந்ததைப் போல, திராவிட இயக்கம் வளர்ந்ததைப் போல. எனவே, மேடையில் இருக்கிறஅப்படிப்பட்ட அனைத்து அருமைத் தோழர்களுக்கும் என்னுடைய உளப்பூர்வமான வணக்கம்.

எல்லோரும் பேசிக்கொண்டிருக்கிற போது விந்தையோடு எனக்குச் சில உணர்வுகளும் நினைவுகளும் வந்தன. ஏனென்றால் தாய்மார்கள், சகோதரிகள், 50 வயதுக்குக் குறைவாக இருக்கக்கூடியவர்கள், அதைத் தாண்டியவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இது விசித்திரமாக இருக்கும்.

### துண்டுச்சீட்டு!

1976 ஜனவரி 30-ஆம் தேதி பேசிவிட்டு, 31 ஆம் தேதி இங்கே வருகிறோம்.திண்டிவனத்திலே திராவிடர் கழகப் பொதுக்கூட்டம். அன்னை மணியம்மையார் அவர்களும் நானும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சாதனைகள், கலைஞரின் செயல்கள் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அது முடிந்த உடனே எங்களுக்கு ஒரு துண்டுச் சீட்டு வந்தது.

அதில், "சென்னை'விடுதலை' அலுவலகத்திலிருந்து தொலைபேசியில் உங்களுக்கு சொல்லச் சொல்லி ஒரு தகவல் வந்திருக்கிறது. அம்மா அவர்களுக்கும் உங்களுக்கும் இதைப் பகிர்ந்துகொள்கிறோம். தி.மு.க. ஆட்சி மாலை 6 மணிக்கெல்லாம் கலைக்கப்பட்டுவிட்டது" என்று அந்தச் சீட்டில்தோழர்கள் எழுதிக் கொடுத்தார்கள்.

மிசாவுக்கு முன் கலைஞர் அவர்களுடைய கடைசி உரையாக, இங்கே பக்கத்தில் இருக்கிற செயிண்ட் பீட்ஸ் பள்ளிக்கூடத்தில்தான் உரையாற்றுகிறார். அதில் அழகாகச் சொன்னார், "என்னுடைய ஆட்சி கலைக்கப்பட்டிருக்கிறது. வீட்டிற்குப் போனால் எந்தப் பாதுகாவலரும் மற்றவர்களும் இல்லை".

அன்னை மணியம்மையார் அவர்கள், "எந்தக் காரணத்தைக் கொண்டும் யாரும் பதற்றப்படாதீர்கள்; இதை எதிர்கொள்வோம்" என்று அறிவுரை சொல்லிவிட்டுக் கூட்டத்தை முடித்தோம்.

### அன்றைய கடைசி உணவு!

கூட்டம் முடித்து இரவு வந்தோம். நடுச்சாலையில் உணவருந்துவது எங்களுக்கு வழக்கமானது. வேனை நிறுத்திவிட்டு, அன்னை மணியம்மையார் அவர்கள் உணவு பரிமாறினார்கள். அதுதான் அன்றைய கடைசி உணவு. இட்லி சாப்பிட்டுவிட்டு இங்கே சென்னைக்கு வந்தோம்.

'திடலில்' அன்னையார் அவர்களை விட்டுவிட்டு நான் வீட்டிற்குப் போவது வழக்கம்.நாங்கள் எதிர்பாராத ஒரு காட்சி அங்கே காத்திருந்தது. என்ன காட்சி என்றால், இன்றைக்கு எப்படித் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம் என்று சொன்ன உடனே கொடிகள் மிகப்பெரிய அளவிற்கு அணிவகுத்திருக்கிறதோ, அதுபோல கொடிகளுக்குப் பதிலாக அவ்வளவும் காக்கிச் சட்டையினர், உள்துறை அதிகாரிகள்!

காந்தி இர்வின் சாலை பாலத்திலிருந்து இந்தத் திடல் முழுவதுமே உள்ளே நுழைந்தால் ஏதோ தேடப்படக்கூடிய கைதியைப் பிடிப்பதற்கு ஆயத்தமாக இருப்பது மாதிரி துப்பாக்கி, லத்தி எல்லாம் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. இன்றைக்குத் திடலில் இவ்வளவு வசதியான அமைப்புகள் உள்ளன. அன்று அம்மா அவர்களைஅவர்களுடைய அறையில்விட்டுவிட்டு, "அம்மா, நிலைமையைப் பார்த்தீர்களா? வருகிறோம்" என்று சொன்னோம். அதுவரையில் அங்கே காத்திருந்தார்கள் காவல் அதிகாரிகள்.

'விடுதலை' ஆசிரியர் என்ற முறையிலே எனக்குப் புரியும். அந்தக்கட்டடத்தில் வந்து உள்ளே உட்கார்ந்த உடனே, ஒரு தலைமை அதிகாரி வந்து ஆங்கிலத்திலே சொன்னார். "We are come for the unpleasant job" என்று சொன்னார். அதாவது, "நாங்கள் விரும்பத்தகாத ஒரு பணியைச் செய்கிறோம்" என்றார்கள். பழைய ஆட்சியில் யார் என்று தெரியாத புதிய அதிகாரிகள் ஆறு பேர் அங்கே சுற்றித் திரிந்தார்கள். பெரியார் திடலின் சுற்றுச் சுவர் வரை இருந்தார்கள்.

### நான் சொல்வதை விட நீதிபதியே அறிக்கையில் கூறியுள்ளார்!

அன்றைக்கு இரவு 2 மணிக்கு உடனே எங்களைக் கைது செய்து போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்கு அனுப்பினார்கள். அதற்குப் பிறகு அங்கே என்ன நடந்தது, சிறைச்சாலையில் எப்படி நடந்தது என்பதையெல்லாம் நாங்கள் சொல்வதை விட, ஒரு அறிக்கையே தலைசிறந்த நீதிபதியினால் சொல்லப்பட்டிருக்கிறது. அதுதான் 'விசாரணைக் கமிஷன் அறிக்கை'. அதாவது, உச்சநீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதியான ஜஸ்டிஸ் ஷா என்பவர் கொடுத்த அறிக்கை பொதுவானது.

ஆனால், எங்கேயும் இல்லாத ஒரு கொடுமை சென்னைச் சிறைச்சாலையிலே அரங்கேற்றப்பட்டது. எல்லோரையும் மிருகத்தனமாக அடித்தார்கள், கொடுமையாக நடத்தினார்கள், கீழ்த்தரமாக நடத்தினார்கள், வன்மத்தோடு நடத்தினார்கள். ஒரு ஆண்டுக்குப் பிறகுதான் வெளிச்சத்தைப் பார்த்தோம், வெளி உலகத்தைப் பார்த்தோம்.

அன்றைக்கு நாங்கள் நினைக்கவில்லை, 50 ஆண்டுகளுக்குப் பிறகு இப்படி ஒரு கூட்டம் வரும் என்றும், அதற்கு முன்னாலே போய் பேசும் நிலை வரும் என்றும்.

### உண்மையை கூறும் கூட்டம்!

உண்மை என்னவென்றே தெரியாமல், பதவி கிடைத்துவிட்டது என்ற காரணத்தினாலே தலைதூக்கி ஆடக்கூடிய சிலருக்குப் புத்தி கற்பிக்கக்கூடிய அளவிற்கு உண்மைகளைத் தோலுரித்துக் காட்டுகின்ற கூட்டமாக இந்தக் கூட்டம் இருக்கிறது.

இன்னும் கேட்டால், 50 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்ததைப் பற்றிப் பேசுபவர்களுக்கு... எங்களுக்காவதுவயதிருக்கிறது; பேசக்கூடிய சிலர் அப்போது இரண்டு வயதுக் குழந்தையாக இருந்திருப்பார்களா என்று தெரியாது. வரலாற்றை வயதானவர்கள்தான் பேச



வேண்டும் என்ற அவசியமில்லை; இரண்டு வயதுக் குழந்தையாக இருந்தவர் கூட இன்றைக்குப் பேசலாம், அதில் தவறும் இல்லை. ஆனால் பக்குவமாகப் பேச வேண்டும்.

### தி.மு.க. மெழுகு அல்ல இரும்பு!

இதோ தாய்மார்கள் பாதியளவிற்கு வந்திருக்கிறீர்கள். பாராளுமன்றத்தில் இன்னும் உங்களுக்கு மூன்றில் ஒரு பங்கு கிடைக்கவில்லை; ஆனால் இங்குதான் 50% மேல் நீங்கள் ஆக்கிரமித்திருக்கிறீர்கள். அப்படிப்பட்ட தாய்மார்களாகிய உங்களுக்கு ஒன்றைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இந்த இயக்கம் மெழுகு அல்ல. மெழுகு என்றால் உருகும்; ஆனால் இது இரும்பு! இரும்பில் நெருப்பைப் போட்டால் பக்குவமாகிறது என்று அர்த்தம். ஓங்கிச் சம்மட்டியில் அடித்தால் இன்னும் அதற்குரிய கருவி தயாராகிறது என்று அர்த்தம்.

எத்தனை சம்மட்டி அடிகள் வந்தாலும் தாங்கலாம். ஆனால் பொய்யுரைகள், அதுவும் திட்டமிட்ட பொய்யுரைகள், உள்நோக்கத்தோடு சொல்லப்படும் பொய்யுரைகள் என்றால் அதை எவரும் ஏற்கக்கூடாது. எனக்கெல்லாம் ரொம்ப வருத்தம் என்னவென்றால், பேசுவதில் எனக்கு மகிழ்ச்சியில்லை. ஏனென்றால் தகுதியுள்ளவர்களுக்குப் பதில் சொல்லலாம்; தகுதியில்லாதவர்களுக்கு எல்லாம் பதில் சொல்லக்கூடிய அளவிற்கு இந்த ஜனநாயகம் கொண்டுவந்துவிட்டதே என்று நினைக்கும்போது வெட்கப்படுகிறோம், வேதனை அடைகிறோம்.

### கரும்பு மனிதராகவும் இரும்பு மனிதராகவும் இருப்பார்!

நம்முடைய இன்றைய ஒப்பற்றத் தலைவர் இரும்பு மனிதராகவும் இருப்பார், கரும்பு மனிதராகவும் இருப்பார். கரும்புக்குத் தேவையானவர்களுக்குக் கரும்பாக, இரும்புக்குத் தேவையானவர்களுக்கு இரும்பாக இருப்பார். இவருக்குப் பெயர்தான் ஸ்டாலின், மறந்து விடாதீர்கள்!

அப்பேர்ப்பட்ட ஒரு அற்புதமான சூழ்நிலையிலே, இன்றைக்கு அவரைப் பார்த்து ஏதோ ஊதித் தள்ளி விடுவதைப் போலப் பேசுகிறீர்கள். அவரைப் பாதுகாத்துக் கையைப் பிடித்துக் கொட்டடிச் சிறையிலே அடித்தவுடனே, ரத்தம் ஒழுக ஒழுக... இரவு 1 மணி அல்லது 2 மணி இருக்கும், மணி தெரியாது. காரணம் எங்களுக்கு எதுவும் தெரியாது. மங்கள் விளக்கு; படுத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு சிறிய 8 அடி கொட்டடி, 6 பேருக்கு மேலே வரிசையாக இருக்கிறோம். 8 பேருக்கும் சேர்ந்து ஒரு மண்பானை.தாய்மார்களே, நினைத்துப் பாருங்கள்! இதையெல்லாம் சந்தித்தோம்.

### மனிதனாச்சே!

இன்றைக்கு ஏதோ பெரிய ஆடம்பரமான வசதிகள் இருக்கிறது என்று நினைக்காதீர்கள். அங்கே 8 பேர் இருக்கும்போது... வெட்கத்தை விட்டுச் சொல்லுகிறேன், அறியாதவர்கள் எல்லாம் ஏதோ விலை போனவர்கள் போல பேசுகிறீர்களே, அவர்களுக்கு நாங்கள் சொல்லுகிறோம். இரண்டு நாளைக்கு எங்களுக்குப் பழக்கமே இல்லை. காரணம் என்ன தெரியுமா? இன்னொருவருக்கு முன்னால் நாம எப்படிச் சிறுநீர் கழிக்க முடியும்? மிருகமாக இருந்தால் கழிக்கலாம், மனிதனாச்சே!

வேறு வழியில்லாமல் அந்தப் பானையில் போய் இருக்க வேண்டும். 6 பேரில் 5 பேர் நாங்கள் வெளிப்பக்கமாகத் திரும்பிக்கொள்வோம். அறைக்குள்ளே 24 மணி நேரமும் பூட்டி வைத்திருப்பார்கள், வெளியே விடமாட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே, உள்ளே வந்து அடித்துப் போட்டு, ஒருமைப்படுத்தி, கொச்சையான வார்த்தைகளால் திட்டினார்கள். அதையெல்லாம் இந்த அவையிலே சொல்ல நான் விரும்பவில்லை. இஸ்மாயில் கமிஷன் அறிக்கை அதைப் பதிவு செய்திருக்கிறது.

ஒரு நாள், அடித்த களைப்பினாலே நாங்கள் இயல்பாகத் தூங்கிவிட்டோம். தூங்கி விழித்தவுடனே வரிசையாக இருக்கிறோம், பிடித்து உள்ளே தள்ளியவுடனே, கால் இடறி என் மேலேதான் வந்து விழுந்தார்.அவர் ஓர் இளைஞர். அன்றைக்கு 22 வயது இருக்கும். கொஞ்சம் அதிர்ந்துபோய், "யார்?" என்று கேட்டேன். "நான் ஸ்டாலின், ஸ்டாலின்" என்றார்.

### நாங்கள் மனிதநேயம் உள்ளவர்கள்!

2-3 மாதங்களுக்கு முன்னால்தான் திருமணம் செய்துகொண்ட ஓர் இளைஞர். அரசியலில்நாமெல்லாம் கொஞ்சம் அனுபவம் உள்ளவர்கள்; புதிய இளைஞர் தயாராகிறாரே, இவர் மனநிலை எப்படி இருக்கும்? இதுமாதிரி ஒரு கசப்பான அனுபவத்தைப் பார்க்கிறாரே என்று நினைத்த நேரத்திலே, அப்போது நான் மனம் சங்கடப்பட்டோம். ஏனென்றால் நாங்கள் மனிதநேயம் உள்ளவர்கள், சுயமரியாதைக்காரர்கள். அடுத்தவருடைய துன்பத்திலே இன்பம் காணக்கூடியவர்கள் அல்ல; We are not sadists!

"தம்பி, தைரியமாக இருங்கள்" என்று சொன்னேன். "இதுதான் உங்களுக்கு முதல் அனுபவம்" என்று கையைப் பிடித்தேன். கையைப் பிடித்து அவரைக் காப்பாற்றக்கூடிய அளவிற்குத் தழுவித் துடைத்து விட்டோம். அவர் மாமனிதர் என்பதற்கு அடையாளம், அன்றும், இன்றும், என்றும் அந்த நன்றியை அவர் மறப்பதில்லை. கொள்கை ரீதியாக எங்களுக்கு ரத்த பாசத்தை விடக் கொள்கைப் பாசம் கெட்டியானது, மாற்ற முடியாது.

அன்றைக்கு அவருக்கு வயது 20 - 22; இன்றைக்கு அவர் 72-ஐத் தாண்டி இருக்கக்கூடிய அனுபவம் உள்ளவர். அரை நூற்றாண்டு பொதுவாழ்க்கை அனுபவம் உள்ளவர். சாதாரணம் அல்ல, இடையில் எத்தனையோ போராட்டங்களை எல்லாம் சந்தித்திருக்கிறார். அப்படிப்பட்டவர் மிசாவுக்கே போகவில்லை என்றால், சினிமாவில் வேண்டுமானால் 'டூப்' உண்டு; சிறையில் 'டூப்' எல்லாம் கிடையாது! ஒரு வேளை இனிமேல் ஆட்சியில் டூப் வந்தாலும் வரும்.

நான் உயிரோடு வந்து அவர் கையைப் பிடித்துக் காப்பாற்றியவன், மிசாவில் போனவன் இன்றைக்கு வந்திருக்கிறேனே, இதைவிடப் பெரிய சாட்சி வேண்டுமா உங்களுக்கு? எந்த இடத்தில் கைது செய்தார்களோ அந்த இடத்தில் 50 வருஷத்திற்குப் பிறகு உங்களுக்கு முன்னால் இத்தனை தகவல்களைச் சொல்லுகிறோம் என்றால், நீங்கள் சும்மா இந்த ஜென்சியையெல்லாம் வைத்துக்கொண்டு ஆட்டாதீர்கள்.வரலாற்றை சொல்கிறோம்.

### இந்தப் புளுகு கந்த புராணத்திலும் இல்லை!

பி.ஜே.பி.க்கும் உங்களுக்கும் மிகவும் தொடர்பு இருந்தாலும் கூட ஒரு வேறுபாடு இருக்கிறது. இந்த புளுகு மூட்டைகள் இருக்கிறார்களே, கோயபல்சின் குருநாதர்களுக்குச் சொல்கிறோம். பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ் எல்லாம் புராணத்தை வரலாறாக்குகிறார்கள். ஆனால் இப்போது வந்திருக்கும் புதியவர்கள், 'மாற்றம், மாற்றம்' என்று சொல்லி நாட்டிற்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருப்பவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் தெரியுமா? வரலாற்றையே புராணமாக்குகிறார்கள்! புராணத்தை வரலாறாக்குவது பிஜேபி, ஆர்.எஸ்.எஸ் வேலை. ஆனால் இங்கே வரலாற்றையே புராணமாக்குகிறார்கள்."இந்தப் புளுகு கந்தப் புராணத்திலும் இல்லை" என்று பழமொழி உண்டு.

விசாரணைக் கமிஷன் அறிக்கை என்ற புத்தகத்தையே இல்லாமல் ஆக்கிவிட்டார்கள். நெருக்கடி காலத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால், 'ஷா கமிஷன்' அறிக்கை. அகில இந்தியாவிலேநெருக்கடி காலத்தில் என்ன நடந்தது என்று சொல்லும் புத்தகத்தை, வடக்கே அன்றைய காங்கிரஸ் அரசு நூலகங்களுக்குக் கூடப் போகக்கூடாது என்று சொல்லி அத்தனையும் எடுத்துவிட்டது. பிறகு நம்முடைய இரா. செழியன் அவர்களின் முயற்சியினாலே இந்த ஒரே ஒரு பிரதி கிடைத்தது. அன்றைக்கே நாங்கள் வாங்கிப் பத்திரமாக வைத்திருக்கிறோம்.

### வரலாற்றை மாற்ற முடியாது!

நீங்கள் எதை வேண்டுமானாலும் பேசலாம், பேச்சுரிமை உண்டு. பதவி நாற்காலியில் உட்கார்ந்துவிட்டால் எல்லோரும் தலையாட்டுவார்கள் என்று நினைக்கிறீர்கள். கொஞ்ச காலத்திற்கு அப்புறம் யாரும் துணைக்கு நிற்க மாட்டார்கள். பதவிகள் வரும், போகும். ஆனால் மனிதர்கள் என்பவர்கள் நன்றியால், உண்மையால் அடக்கப்பட வேண்டும். வரலாற்றை ஒருபோதும் உங்களால் திரிபுவாதம் செய்துவிட முடியாது.

நீதிபதி இஸ்மாயில் அவர்கள், ஆரம்பத்திலேயே வழக்கறிஞர் ஆவதற்கு முன்னால் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த கதர்ச் சட்டைவாதி; வேறு எந்தக் கட்சியையும் சார்ந்தவர் அல்ல. அவர் தெளிவாகச் சொன்னார்: "கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட விசாரணை கமிஷன் அறிக்கையும், அதன் மீதுஅரசினுடையஆணைக்கு..."என்று.

அதிகாரி ஒருவர் சொல்கிறார்: "இங்கேயே முடிந்தது. நீங்கள் யாரும் வெளியே போக வேண்டும் என்று நினைக்காதீர்கள்; வெளியிலே போக முடியாது" என்று.எங்களுடைய குடும்ப உறுப்பினர்கள் யாரும் வர முடியாது; எங்கே இருக்கிறோம் என்று சொல்ல முடியாது; மிசாவில் இருக்கிறோம் என்பதே தெரியாது.

'வாய்ப்புளித்ததோ, மாங்காய் புளித்ததோ' என்று பேசக்கூடியவர்களுக்கு உதாரணத்திற்கு சொல்ல வேண்டும் என்றால்,கைதாகிஒரு மாதம், பிப்ரவரி 3 அண்ணா அவர்களுடைய நினைவு நாள். ஜனவரியில் எங்களை அடித்ததெல்லாம் மிகப்பெரிய அளவுக்கு என்று சொல்லக்கூடிய அளவுக்கு வந்தது.

### கலைஞரின் முத்திரை!

அதில் கலைஞருடைய சாதுரியத்தைப் பாருங்கள்; பெரியாருடைய குருகுலத்தில் படித்தவர், அவர் எப்படிச் சாமர்த்தியமாகச் செய்வார் என்பதற்கு அடையாளம்.பத்திரிகைகளுக்குச் சென்சார்இருந்ததால் பெயரைப் போடக்கூடாது! சிறைச்சாலையில் யார் யார் கைதியாகி உள்ளே இருக்கிறார்கள் என்று யாருக்கும் தெரியாது. கலைஞர் என்ன பண்ணார் தெரியுமா? அதுதான் கலைஞருடைய முத்திரை! முரசொலியில், பிப்ரவரி 3-ஆம் தேதி அண்ணா அவர்களுடைய நினைவிடத்திற்கு வர முடியாதவர்கள், மாலை போட முடியாதவர்கள் என்று எல்லாருடைய பேரையும் போட்டார்!அந்தப் பட்டியலில் இருக்கிறதா இல்லையா என்று பாருங்கள்.

சிட்டிபாபுவின் டைரி இருக்கிறதே, அது சாதாரணமானது அல்ல! அந்த சிட்டிபாபு, மிசா காலத்தில் தன் உயிரைக் கொடுத்து இந்த இயக்கத்தைக் காப்பாற்றிய ஒரு மாவீரன். அதேபோல சாத்தூரிலே பாலகிருஷ்ணன் அவர்கள்.

### வரலாறு மன்னிக்காது!

இந்த இயக்கம் தாளமுத்து, நடராசன் காலத்திலிருந்து எத்தனையோ பேர்களைச் சிறைச்சாலையில் சந்தித்திருக்கிறது. ஆனால் இவ்வளவு கேவலமாக, சந்தித்தவர்களின் உயிர்த்தியாகத்தைக் கொச்சைப்படுத்தக்கூடிய அளவிலே சொல்லுகிறீர்களே, உங்களை வரலாறு மன்னிக்குமா?

ஏனென்றால், ஸ்டாலினுக்கோ எங்களுக்கோ அதைப் பற்றி ஒன்றும் இல்லை. நாங்கள்'தியாகி, தியாகி' என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை.

தந்தை பெரியார் ஒரு பழமொழி சொல்வார்: "மாமிசம் சாப்பிடுகிறவன் என்பதனாலேயே, எலும்புத் துண்டைக் கழுத்திலே போட்டுக்கொண்டு அலைய வேண்டிய அவசியமில்லை"என்று சொல்வார். அதுமாதிரி நாங்கள் ஒன்றும் சிறையிலே இருந்தவர்கள் என்று தியாகி பட்டம் போட்டுக் கொண்டது இல்லை.

பின்னர் ஏன் அதைச் சொல்கிறார்கள்? இங்கேதான் கவனிக்க வேண்டும். இதில் ஒவ்வொரு இடமும் இருக்கிறது, நேரம் இல்லாததனால் நான் படிக்கவில்லை. இந்த அறிக்கை தேவையாக இருக்கிறது.

அடித்தார்கள், அடித்து உள்ளே தள்ளினார்கள். இதே 'விடுதலை' மேலாளரின் முதுகுத்தண்டு வடம் பாதித்தது. அவரைத் தூக்கி அடிப்பதற்கு வருகிறார்கள். முதலில் வரிசையாக இருந்த எங்களை அடித்தார்கள். திராவிடர் கழகத்தில்11 பேர். ஒவ்வொரு செல்லாக வரும்போது, ஆரம்பம் எங்களிடம் தான்.

நாங்கள் நினைக்கவே இல்லை. ஏனென்றால், 6 மணிக்கே எங்களை கைது செய்து உள்ளே உணவு கொடுத்துத் தள்ளினால், உணவுக்கு மட்டும் தான் கதவைத் திறப்பார்கள். திறந்து உள்ளே போட்டால், அப்புறம் சட்டப்படி பொழுது விடிந்தால்தான் திறக்க வேண்டும். ஆனால் இரவு 9 மணிக்கு வந்து,'உங்கள் அறையை சர்ச் செய்ய வேண்டும்' என்றார். 'நாங்கள் என்ன செய்யப் போகிறோம், நாம் என்ன வைத்திருந்தோம்? எனவே சர்ச் பண்ணட்டும்' என்று சொன்னால், 'வரிசையாக உட்காருங்கள்' என்றார்.

ஆனால்,'உட்காருங்கள்' என்றெல்லாம் வார்த்தையே கிடையாது; 'உட்காருங்கடா' என்று அசிங்கமான வார்த்தைகள்! வாழ்நாளில் எங்கள் நண்பர்கள் மத்தியிலோ, எதிரிகள் மத்தியிலோ கூடக் கேட்டிராத கொச்சையான வார்த்தைகள்! எங்கள் வீட்டுப் பெண்மணிகளை இழிவுபடுத்தக்கூடிய வார்த்தைகள்! அவைகளையெல்லாம் தாங்கிக்கொண்டோம்.

### வரலாறு அதைச் சொல்லும்!

வரிசையாக வந்து அடித்தார்கள். நாங்கள் அதை எதிர்பார்க்கவில்லை. யார் யார் எந்தெந்த அறையில் இருந்தார்கள் என்பதற்கு இங்கே மிகப்பெரிய அளவில் குறிப்புகள் இருக்கின்றன. யார் யார் இருந்தார்கள் என்று பெயர்களில் பலமுறை குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால்,'இஸ்மாயில் என்றொருவரே இல்லை' என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது? 'ஸ்டாலின் என்றே ஒருவர் இல்லை, என்று சொல்லக்கூடிய அளவுக்குச் சொன்னால், அப்படிச் சொல்லுகிறவரைப் பற்றி புளுகுணி என்று இழிவாக நினைப்பார்களே தவிர, அதற்காக ஸ்டாலினோ, வீரமணியோ ஒவ்வொருவர் கதவையும் தட்டி, 'நாங்கள் சிறைக்குப் போய்வந்தோம்' என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை!வரலாறு அதைச் சொல்லும்! அந்த வரலாற்றை யாராலும் சுலபமாக அழித்துவிட முடியாது!

எடுத்துக்காட்டுக்காகச் சொல்கிறேன்... இஸ்மாயில் ரிப்போர்ட்டில்50-ஆவது பக்கத்தில், '1976-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4-ஆம் நாளிட்ட கடிதத்தை அரசு தலைமைச் செயலாளருக்கு அனுப்பியதின் கண்காணிப்பாளர் நடத்தை குறித்ததாகும்' என்று சொல்கிறார்.இதெல்லாம் சாதாரணமல்ல, அரசாங்கத்தின் மிகப்பெரிய ஆவணங்கள்.

இப்போது அரசியல் கைதியாக போகவில்லை என்கிறார்கள். இன்னும் சில புத்திசாலிகள் இருக்கிறார்கள், ராஜாவை மிஞ்சும் ராஜவிசுவாசிகளாக அங்கே புதிதாக போயிருக்கிறார்கள். அவர்கள் எங்கு சென்றும் நிலைத்ததே இல்லை.

அந்தக் கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: "அரசியல் கைதியாக சிறையில் இருந்த தன் மகன் மு.க. ஸ்டாலினை திரு. மு. கருணாநிதி 1976-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3-ஆம் நாள் அன்று 12.40-க்கு", மணி உட்பட, தேதி உட்பட இவ்வளவும் பதிவாகி இருக்கிறது.

### அஞ்சாநெஞ்சன்!

கலைஞர் என்றால், அசையாத, அஞ்சாநெஞ்சன்! காரணம், ஈரோட்டுப் பள்ளிக்கூடத்தில் படித்தவர்! பெரியாரின் நெஞ்சுரம், அண்ணாவின் கனிவு, அவருடைய இயல்பானது. அதனால் மிகத் தெளிவாக அவையெல்லாம் பொறுத்துக்கொண்டு இங்கே கேட்கிறார்.

அப்போதுதான் எங்களுக்கு நேர்காணல். குடும்ப விஷயங்கள் பற்றி பேசிக்கொண்டிருக்கையில், சிறைச்சாலையில் தி.மு.க.வைச் சேர்ந்த அரசியல் கைதிகளாக உள்ள தன் மகனிடம் கேட்டார். அரசியல் கைதிகள் சிறைச்சாலைக்குள் அடிக்கப்படுகிறார்கள் என்று வதந்தி நிலவுகிறதுஎன்று கேட்டார்.அங்கே எப்படி பதில் சொல்ல முடியும்? ஏனென்றால் அங்கே என்ன நடக்கிறது என்று தெரியாது. அப்படிப்பட்ட ஒரு கொடுமையான சூழ்நிலையிலே இருக்க முடியுமா? 'எல்லாம் நன்றாக இருக்கிறது'.அனைவரும் வீட்டில் அப்படித்தானே சொல்வோம்.

### உங்களை காப்பாற்ற ஆள் தேவைப்படும்!

'உண்மை'யை என்றைக்கும் நீங்கள் களப்பலியாக்கிவிட முடியாது! இன்னமும் நாங்கள் உயிரோடு இருக்கிறோம்! இஸ்மாயில் கமிஷன் ஆதாரப்பூரமாக இருக்கிறது. 94 நெருங்கப் போகிற இந்த வயதில் கூட நினைவாற்றல் தவறாமல் இருக்கிறோம்! எங்களுடைய நினைவாற்றலுக்கு நாங்களே நன்றி செலுத்திக்கொள்ள வேண்டும்!

இன்னும் ஆயிரம் மிசாக்களை இந்த திராவிட இயக்கம் பெற்றாலும், நெருப்பாற்றில் நீந்தினாலும், இந்த இயக்கம் வளரும்!

எனவே, ஸ்டாலின் என்றால் இரும்பு மனிதன் என்று பெயர்! திராவிட இயக்கம் என்றால் எஃகுக் கோட்டை என்று அர்த்தம்! அந்தக் கோட்டை வேண்டுமானால் மற்றவர்களுக்குப் போய் சேர்ந்திருக்கலாம்; எஃகுக் கோட்டை, கொள்கைக் கோட்டையை ஒருபோதும் உங்களால் அசைக்க முடியாது! அசைக்க முயற்சித்தால் நீங்கள் அதிலேயே சிக்கிக்கொள்வீர்கள்; உங்களைக் காப்பாற்றுவதற்கு ஆள் தேவைப்படும்.

இவ்வாறு திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி உரையாற்றினார்.